28th September 1955]

SRI P. K. GOPALAKRISHNAN: But it is not a supplementary question.

MR. SPEAKER: We are in the next question.

Lands for landless peasants in Salem district

* 2521 *Q.*—SRI N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the total extent of Government lands distributed to the peasants in Salem district during 1954–55; and

(*b*) total extent of Government lands distributed to the landless peasants in Salem district till May 1955?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) The total extent assigned during 1954–55 (i.e., from April 1954 to March 1955) is 25,380·04 acres.

(*b*) The further extent assigned during April and May 1955 is 2,763·24 acres.

SRI S. RAMALINGAM: இருபத்து ஏழாயிரம் ஏக்கரா வினியோகிக்கப்பட்டதில் எத்தனை ஏக்கரா இப்பொழுது வினியோகிக்கப்பட்டிருக்கிறது? அதனால் கிடைத்த தான்யம் எவ்வளவு?

THE HON. SRI M. A. MANICKAVELU: கொஞ்சம் கொஞ்சமாகத்தான் சாகுபடிக்கு வரும். அதற்குத் தகுந்தாற்போல் மகசூலும் வரும்.

SRI N. K. PALANISAMY: சர்க்கார் இவ்வளவு நிலங்களை வினியோகித்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் வினியோகிக்கப்பட்டிருக்கும் பல நிலங்களை விவசாயிகள் சாகுபடி செய்து கொள்வதற்கு ஏற்றுக் கொள்ளவில்லை என்பது உண்மையா? இதைப்பற்றி ஆபீசர்களிடம் விசாரிப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: சர்க்காருக்கு இவ்வளவு நிலம் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்கின்ற தகவல்தான் தெரியும். மேலும் எந்த வகையில் உதவி செய்தால் அந்த நிலங்களை அவர்கள் சாகுபடிக்குக் கொண்டு வருவார்கள் என்பதையும் கவனித்து வருகிறார்கள்.

SRI M. P. SUBRAMANYAM: அமைச்சர் அவர்கள் 27 ஆயிரம் ஏக்கரா நிலம் வினியோகிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆத்தூர் தாலுக்காவிலேயே இது சம்பந்தமாகப் பல பிழைகள் செய்யப்பட்டிருக்கின்றன. பத்துப் பதினைந்து வருஷமாக சிவாஜிமாவாக நிலத்தை பல விவசாயிகள் உழுதுகொண்டிருந்தார்கள். அவர்களிடமிருக்கும் நிலத்தை மேய்ச்சல் நிலம் என்பதாகச் சொல்லி அடமானம் செய்யாமல் இது வரையில் மேய்ச்சல் நிலமாக இருந்தவற்றை வேறு விவசாயிகளுக்கு நிலம் வினியோகம் செய்திருக்கிறார்கள் என்பது சர்க்காருக்கு தெரியுமா? தெரிந்தால் ஏற்கனவே ஏழு, எட்டு வருஷங்களாக யார் யார் எந்தெந்த நிலத்தை ஓட்டிக்கொண்டிருந்தார்களோ அவர்களுக்கே அந்த நிலங்களை அடமானம் செய்ய வேண்டுமென்பதாக தாசில்தார்களுக்கு சர்க்கார் உத்திரவு போடுவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: சாதாரணமாக ஆத்தூரில் மட்டுமல்ல, எல்லாயிடங்களிலும் எந்தெந்த சிவாஜிமா நிலங்களை யார் யார் பயிரிட்டுக் கொண்டு வருகிறார்களோ, அவர்களுக்கே தான் அந்த நிலத்தை அடமானம் செய்யும் விஷயம் கவனிக்கப்படும். ஏதோ சில இடங்களில் பிசகுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அம்மாதிரி பிசகு ஏற்பட்டிருப்பதாக குறிப்பிட்ட விஷயத்தை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அது பற்றி பரிசீலிக்கப்படும்.